

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
June 2021

## பரிசுத்த வேதாகமம்




வேதம் உன்
கையில் இருந்தால்.
சேதம் உன்
வாழ்வில் வராது.



HOLY BIBLE

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

### Our TV Program:

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday 6.00 P.M on Tamilan TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*
YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA







Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 21 ஜுன் 2021 கனி 7



MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39




பாடம் : 19


தலைப்பு : கல்லெறிதல் – Stoning

வேத வாசிப்பு : யாத்திராகமம் 19:13

1. அஞ்சனம்பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும் - லேவி.20:26,27
2. தேவகட்டளையை மீறி விறகுபொறுக்கினவர்களை - எண்.15:32-36
3. பவுலைக் கல்லெறிந்தார்கள் - அப்.14:19,20

எங்கே நம்பிக்கையுண்டோ
அங்கே விசுவாசம் உண்டு
எங்கே விசுவாசம் உண்டோ
அங்கே அற்புதங்கள் உண்டு







Where there is hope
there is faith
Where there is faith
miracles happen

**the word of christ** இருந்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும் **YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509





**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 249

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எவன் தன் பெலன் தன் தேவனாலே உண்டானதென்று சொல்லி மிஞ்சிப்போய்க் குற்றவாளியாவான்?
2. நான் அதைச் செலுத்தி தீர்ப்பேன் என யாருக்கு பவுல் எழுதினார்?
3. எந்த புத்திரர் என் ஜனத்தை நிந்தித்து, அவர்கள் எல்லையைக் கடந்து பெருமைபாராட்டிச் சொன்ன தூஷணங்களையும் கேட்டேன் என்றார்?
4. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறாரா?
5. எந்த தீர்க்கதரிசியைப் பார்த்து நீ ஆசாரியரிடத்தில் வேத நியாயத்தைப் பற்றிக் கேள் என்று சேனைகளின் கர்த்தர் சொன்னார்?
6. பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு என்ன ஆவான்?
7. நான் கூப்பிட்டபோது, அவர்கள் எப்படிக் கேளாமற்போனார்களோ, அப்படியே அவர்கள் கூப்பிட்டபோது நானும் கேளாமலிருந்தேன் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார்?
8. இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினவர்கள் யார்?
9. கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் என்னவாயிருக்கிறார்?
10. வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது அவசியமா?

## வேதாகம ஆய்வு... 35 எஸ்றா - Ezra



1. ஒரு ஆசாரியன்
2. நியாயப்பிரமாணத்தில் தேறின வேதபாரகன் – எஸ்றா 7:6
3. தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான் – எஸ்றா 7:10
4. தேவ சமுகத்தில் அறிக்கையிட்டு அழுதான் – எஸ்றா 10:1
5. மறு ஜாதியான ஸ்திரீகளை விவாகம்பண்ணினதினால் பாவஞ் செய்தீர்கள் என்று எச்சரித்தான் – எஸ்றா 10:10

சிறுவர் பகுதி

## எலியாவின் நாட்களில்...

வேத பகுதி: லூக்கா 4:25-26



அன்பான தம்பி தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எலியாவின் நாட்களில் என்ன நடந்தது தெரியுமா? மூன்று வருஷமும் ஆறுமாதமும் வானம் அடைபட்டு மழைபெய்யவே இல்லை. இதனால் தேசமெங்கும் ஒரே பஞ்சம் விளைச்சல் இல்லை, தண்ணீர் பற்றாக்குறை ஆற்று நீரும் வற்றிப்போயின.

இதனால் எலியா சரெப்தா ஊரிலிருந்து ஒரு விதவையின் வீட்டிற்கு தேவனால் அனுப்பப்பட்டார். அந்த வீட்டிலே இருந்த அந்த விதவைப் பெண் விறகு பொறுக்கிக்கொண்டு ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்றாள். இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறேன் என்றாள். அப்பொழுது எலியா முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம் என்றான். முதல் அடையைத் தனக்கு கொண்டு வரும்படி சொன்னார். அந்தப்படியே அவள் செய்து பஞ்சகாலமெல்லாம் அந்த அப்பத்தினாலே போஷிக்கப்பட்டாள்.

அவள் செய்தது என்ன? எலியாவின் சொற்படி செய்தாள் அவளும், இவனும் அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தருடைய வார்த்தையை கொண்டுவருகிற ஊழியக்காரருடைய வார்த்தையின்படி செய்கிற குடும்பங்கள் இன்றும் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்களும் ஆசீர்வதிக்கப்பட தேவனுடைய வார்த்தைக்கு உங்களை முதலாவது ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது எக்காலத்திலும் கர்த்தர் உங்களை போஷிக்கவும், காக்கவும் அறிந்திருக்கிறார்.

இந்த எலியா அநேக விதவைகள் இஸ்ரவேலிலே இருந்தும் குறிப்பாக சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையின் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். தேவன் எந்த வீட்டிற்கு எலியாவை அனுப்பினாரோ அதே வீட்டிற்கு சென்றார். அந்த வீட்டிலே ஒன்றுமில்லை என்பதையும் எலியா அறிந்திருந்தார். ஆனால் நடந்தது என்ன? எலியாவின் வார்த்தைப்படியே அந்த குடும்பம் பஞ்சகாலத்தில் போஷிக்கப்பட்டது. நாமும் தேவனுடைய மனுஷர்களை ஏற்றுக்கொள்ளும்போது நம்முடைய குடும்பமும் போஷிக்கப்படும்.

**மனப்பாடவசனம்**

**"எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும்,<br>மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான்,<br>அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல்<br>மழை பெய்யவில்லை" – யாக்கோபு 5:17**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 21 ஜுன் - 2021 கனி - 7


ஆசிரியருரை

## அவமானம்
## Shame



உலகத்தில் எதைவேண்டுமானாலும் தாங்கிக்கொள்ளலாம் ஆனால் அவமானத்தை மாத்திரம் ஒருவர் தாங்கிக்கொள்வது என்பது மிகவும் கடினமான காரியம் என்பதை நாம் அறிவோம். உலகத்தை பாவத்திலிருந்து மீட்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு இவ்விதமான அவமானத்தை தாங்கினார். "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபி.12:2). அவருக்குமுன்பாக தேவனுடைய வலது பாரிசத்தில் உட்காரக்கூடிய சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது, ஆண்டவர் இயேசு அதை அடையவேண்டுமானால் அவருக்கு உலகத்திலே வரக்கூடிய அவமானத்தை எண்ணாமல் அதற்காக போராடவேண்டி இருந்தது. ஆகையால் ஆண்டவர் இயேசுகிறிஸ்து மரணபரியந்தமும் தனக்கு வந்த அவமானத்தோடு போராடினார். இன்று சிலருக்கு அவமானம் வந்துவிட்டால் தங்களை மாய்த்துக்கொள்ளுகிறார்கள் அல்லது அந்த இடத்தைவிட்டு காலிசெய்து போய்விடுகிறார்கள். ஒருவேளை தமக்கு வந்த அவமானத்தை கர்த்தர் எண்ணியிருப்பாரேயானால் நம்முடைய நிலை என்னவாயிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். நாம் பாவத்திலே இருந்திருப்போம் மரணம் நம்மை ஆண்டுகொண்டிருந்திருக்கும்.

ஆண்டவர் இயேசு சொல்லமுடியாத அளவுக்கு அவமானத்தை சகித்தார். "சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி; யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி, அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை வணங்கினார்கள். அவரைப் பரியாசம்பண்ணினபின்பு, சிவப்பான அங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையும்படி வெளியே கொண்டுபோனார்கள்" என்று மாற்.15:17-20 வசனங்களில் படிக்கிறோம். உன்னதமான தேவனுடைய குமாரனை அவர்கள் அறியாமல் எந்த அளவு கொடுமைப்படுத்த முடியுமோ அந்த அளவு அவரை கொடுமைப்படுத்தி அவமானப்படுத்தினார்கள். இவைகளை சகித்துக்கொண்டு பொறுமையுடனிருந்தார். எதற்காக? தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றும்படியாகவும் உங்களையும் என்னையும் பாவத்திலிருந்து

மீட்கும்படியாகவும் அவர் அந்த அவமானத்தை சகித்தார். இன்றைக்கு கிறிஸ்தவர்களாக இருக்கிற நாம் அவருடைய நாமத்தினிமித்தம் வரக்கூடிய அவமானத்தை அந்தவிதமாக சகிக்கிறோமா என்றால் இல்லை. நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கி இருக்கிறார். நான் ஏன் ஒரு படி இறங்கவேண்டும். என்னாலேயெல்லாம் அப்படி இறங்கமுடியாது. தேவன் என்னை உயர்வாக வைத்திருக்கிறார் என்று சொல்லி எத்தனைபேர் பாடுகளையும், அவமானத்தையும் சகிக்கமுடியாமல் மேலோட்டமான கிறிஸ்தவர்களாகவே வாழ விரும்புகின்றனர். எனக்கு அன்பானவர்களே, அவரோடு பாடுகளை சகித்தோமானால் அவரோடு ஆளுகையும் செய்வோம் என திருமறைபோதிக்கிறது.

கர்த்தருடைய பாடுகளைப் பார்க்கும்போது உங்களுக்கு வரும் பாடுகள் பெரிதான ஒன்றல்ல. "அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளரை அவரோடேகூடச் சிலுவைகளில் அறைந்தார்கள். அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதினாலே நிறைவேறிற்று" (மாற்.15:27,28). அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, ஆனால் அவர் அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்படும்படியாக கள்ளர்கள் மத்தியில் அவரை சிலுவையில் அறைந்தார்கள். பச்சை மரத்திற்கே இப்படி என்றால் பட்டமரமாகிய நமக்கு எப்படிச்செய்வார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். உங்களுக்கு வரும் பாடுகளைக் குறித்து ஆச்சரியப்படவேண்டாம். அவைகள் எல்லாம் சம்பவிக்கவேண்டியதே. அவைகளை நம் ஆண்டவர் இயேசு சகித்து அவைகளை ஏற்றுக்கொண்டதுபோல நாமும் ஏற்றுக்கொள்ளவேண்டும். உலகத்திலே உபத்திரவம் உண்டு ஆனால் திடன்கொள்ளுங்கள் என்கிறார். அவர் உலகத்தை ஜெயித்தார். அதைப்போல நாமும் உலகத்தை ஜெயிக்க கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம்.

அப்போஸ்தலர்களுக்கும் பலவிதமான பாடுகளும் அவமானங்களும் வந்தது அவைகளை ஊழியத்தின் நிமித்தமாக சகித்தார்கள். பவுலை, "அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்குவெளியே இழுத்துக்கொண்டு போனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்" (அப்.14:19,20). அப்போஸ்தலர்களில் சிலரை மரணபரியந்தமும் துன்பப்படுத்தினார்கள். அதில் அப்போஸ்தலனாகிய பவுலும் ஒருவன். அவர்களுடைய துன்புறுத்துதலுக்கு அவன் பயப்படாமல் கிறிஸ்துவைக்குறித்து பிரசங்கித்தான். அவனை ஆசிய முழுமைக்கும் கர்த்தர் எடுத்து பயன்படுத்தினார். அவருடைய உறுதிமொழி "கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்" என்பதாயிருந்தது. அந்த அளவு ஆண்டவருடைய ராஜ்யத்திற்கு அர்பணித்த ஒரு அப்போஸ்தலனாக அவர் இருந்தார்.

கர்த்தராகிய இயேசு; "சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என எபிரெய ஆசான் சொல்லுகிறார் (எபி.12:2). சிலுவையைச் சகித்தார் என்று சொல்லும்போது; அவருடைய உன்னதமான சாயலை இங்கே நீங்கள் நினைத்துப்பார்க்கவேண்டும். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி,



தாவீதின் சங்கீதத்தில் "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்.16:11) எனத் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. நாம் இந்த பூவுலகில் எங்கு சென்று முட்டிமோதினாலும் நித்திய மகிழ்ச்சியையும் களிப்பையும் பெற்றுக் கொள்ளமுடியாது, தேவனுடைய சமுகத்தில் மட்டும் தான் இவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே அன்பு தோழிகளே, தேவனிடத்திற்குத் திரும்பி தேவசமூகத்தில் நித்திய மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள். தேவனுக்குள் எப்போதும் சந்தோஷம் உண்டு - Rejoice is always available in God.

அன்றைய நாட்களில் ஒரே மெய்தேவனையே தங்கள் சொந்த தெய்வமாகக் கொண்டிருந்த இஸ்ரவேலை நோக்கி "பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்" (யோவேல் 2:21) என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. அதே மெய் தேவனிடத்திற்கு மனந்திரும்பியிருக்கிற ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம்மையும் பார்த்து தேவன் மகிழ்ந்திரு களிகூரு என்றெல்லாம் கூறி ஆறுதல் படுத்துகிறவராகயிருக்கிறார். மகிழ்ந்திரு, களிப்பாயிரு அல்லது சந்தோஷமாயிரு என்ற வார்த்தைகள் 400 தடவைகளுக்கும் மேலாக வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது - The words `Rejoice and joy are found more than the 400 time in the Bible. தேவன் நம்மேல் எவ்வளவு கரிசனையுள்ளவராக இருந்தால் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இவ்வாறு எழுதப்பட்டிருக்கும்! இப்பேர்பட்ட தெய்வத்தை தன் சொந்த தெய்வமாகக் கொண்ட ஜனம் பாக்கியமுள்ளதல்லவா? ஆம், நாம் எச்சூழலில் அல்லது எந்நிலையிலிருந்தாலும் பாக்கியவதிகள்தான். எனவே நாம் பயப்படுகிறவர்களாக, கவலைப்படுகிறவர்களாக, வெட்கப்பட்டு கூனிகுறுகி போனவர்களாகக் காணப்படாதபடி 'மகிழ்ந்து களிகூருவோம்'.

அன்பான சகோதரிகளே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ந்து களிகூரும்படிக்கு கிறிஸ்துவின் வசனங்கள் நம்மைப் பெலப்படுத்துகிறதாய் இருக்கிறது. கர்த்தருடைய வசனங்கள் 'ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது: எனவே நாம் எதைக்குறித்தும் கவலைப்படவேண்டியதில்லை, நமக்கு இப்பூமியில் கிடைக்காத காரிங்கள் ஏராளமிருக்கலாம், ஆனால் எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமாகவும் இருக்கிறது என்று சொன்ன பிரசங்கியின் வசனத்தை நினைவுகூருவோம். அவைகள் எல்லாம் அநித்தியமானவைகள், நாம் அவரைக் (இயேசுவை) காணமலிருந்தும், தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக் கிறபடியால் சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷ முள்ளவர்களாய்க் களிகூர்ந்து நம்முடைய விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறவர்களாயிருக்கிறோம் (1பேது.1:8-9). எனவே நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுவோம். "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா.16:24) என்று இயேசு சொல்கிறார். எனவே மகிழ்ந்து களிகூருவோம். கர்த்தர் நம்மை தம்முடைய நித்திய மகிழ்ச்சி நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல சீக்கிரம் வருகிறார். ஆயத்தமாயிருப்போம் அதுவே நிலையானது நித்தியமானது. அவருடைய நித்திய மகிழ்ச்சி உங்கள் தலையின் மேல் இருக்கும். மறுபடியும் சொல்லுகிறேன் "மகிழ்ந்து களிகூருங்கள்" ஆமென்.

# மகிழ்ந்து களிகூரு - Be Glad and Rejoice

பெண்கள் பகுதி

-Glory Arjunan



நீங்கள் இயேசுவைக் குறித்து போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களா? மகிழ்ந்து களிகூருங்கள்! ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் வார்த்தையைக் கேட்டபோது சந்தோஷப்பட்டார்கள். "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப்.2:41). கர்த்தர் தமது சபையில் அவர்களை சேர்த்துக்கொண்டார். நீங்களும் அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு மகிழ்ந்து களிகூருங்கள். நீ ங் க ள் கிறிஸ்தவர்களாயிருந்து பலவிதமான சோதனையில் அகப்படும்போது, "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக்.1:3). மனுஷகுமாரனாகிய இயேசுவின் நிமித்தமாக ஜனங்கள் உங்களை பகைத்து, உங்களை புறம்பாக்கி, உங்களை நிந்தித்து தள்ளிவிடும்போது, "அந்நாளில் நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்..." (லூக்.6:22-23). "...உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக்.10:20). கிறிஸ்துவை முழுமனதுடனே ஏற்றுக்கொண்ட ஒருவர்கூட துக்கத்திலே நிலைத்திருப்பதில்லை. கிறிஸ்தவம் ஒருபோதும் ஒரு துக்கம் நிறைந்த மார்க்கமாக ஏற்படுத்தப்படவில்லை. Christianty was never designed to be a religion of sadness. கிறிஸ்துவுடனே நாம் கொண்டிருக்கிற ஐக்கியம் இப்பூமியிலுள்ள எந்த ஒரு உறவுடனும் நாம் கொள்ளும் ஐக்கியத்தைக் காட்டிலும் அற்புதமானது! நாம் கிறிஸ்துவுக்குள் வாழும்போது ஒருபோதும் ஏமாற்றமோ மனச்சோர்வோ ஏற்பட முடியாது. ஏனெனில் அவர் நம்முடைய எல்லாபாடுகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நம்மை விடுவித்து இரட்சிப்பவர். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா.3:16) என வாசிக்கிறோம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தர் நம்நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார் என விசுவாசிக்கவேண்டும். அப்போது, "....அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்" (செப்.3:17). தேவன் நம்மில் மகிழ்ந்து களிகூரும்போது, நாம் அவரில் மகிழ்ந்து களிகூரவேண்டாமா? மகிழ்ந்து களிகூருவோம்.

எபிரெய பாஷையில் சந்தோஷம் - Joy என்பதற்கு நித்திய மகிழ்ச்சி - eternal pleasure என்று சொல்லப்படுகிறது. தேவசமுகத்தில் இந்த மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளமுடியும். மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது; வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது" (1நாளா.16:27). மேலும்



அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8). ஒரு அலுவலகத்தில் மேனேஜராக வேலைபார்க்கிற ஒருவரைப்பார்த்து நீங்கள் நாளையிலிருந்து வாட்ச்மேன் வேலையை பொறுப்பேற்றுக்கொள்ளுங்கள் என்றால் அவர் அந்த வேளையை ஏற்றுக்கொள்ளுவாரா என்பதை எண்ணிப்பாருங்கள். ஒன்று அந்த அலுவலகத்திலிருந்து அவர் இராஜினாமா செய்து கொள்ளுவார் அல்லது என்னை ஏன் அந்தவேளைக்குத் தள்ளுகிறீர்கள் என்று போராடுவார். ஆனால் ஆண்டவர் இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே தாழ்த்தி அதற்காக தம்மை ஒப்புக்கொடுத்தார். சிலுவையின் மரணபரியந்தமும் தம்மை தாழ்த்தினார். சிலுவை வரை அவரை அவமானப்படுத்தினார்கள். ஒரு மனிதனை ஒரு முறை இரண்டுமுறை அவமானப்படுத்தினாலே அவனால் தாங்கிக்கொள்ளமுடியாமல் ஏதாவது செய்து கொள்ளுவான். ஆண்டவர் சிலுவை வரை அந்த அவமானத்தை தாங்கிக்கொண்டார். "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1பேது.2:23). அநேகர் பாடுபடுகிறார்கள். ஆனால் பதிலுக்குப் பதில் செய்துவிடுகிறார்கள். இவ்வாறாக நாமே தண்டித்துவிட்டால், நாம் தேவனுடைய பதவியை எடுத்துக்கொள்ளுகிறோம் என்று அர்த்தம். இங்கே இயேசுவானவர் ஒருவரையும் பாடுபடும்போது பயமுறுத்தாமல் தம்மை அனுப்பிய பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். நீங்கள் உங்களுக்கு வரும் பாடுகள் பிரச்சனைகளிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ள உங்களை தேவனிடத்தில் அவைகளை ஒப்புக்கொடுக்கின்றீர்களா?

பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த சவுல் ராஜாவை அறியாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. அவன் தனக்கு வந்த தோல்வியை ஏற்றுக்கொள்ள மனதில்லாமல் தற்கொலை செய்துகொண்டான். "தன் ஆயுததாரியை நோக்கி: அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு, என்னை அவமானப்படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் குத்திப்போடு என்றான்; அவனுடைய ஆயுததாரி மிகவும் பயப்பட்டதினால், அப்படிச் செய்யமாட்டேன் என்றான்; அப்பொழுது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்" (1சாமு.31:4). இந்த சவுலைப்போல அவமானத்தை தாங்கமுடியாமல் தற்கொலை செய்து கொள்ளுகிறவர்களைக்குறித்து நாம் அநுதின செய்திதாளில் வாசிக்கிறோம். இதை தேவன் விரும்புகிறதில்லை. அவமானத்தை ஆண்டவர் இயேசுவைப்போல சகித்து தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்பதையே தேவன் விரும்புகிறார். உங்களுக்கு வரும் அவமானத்தை சகிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். சகல அவமானத்திலிருந்தும் ஆண்டவர் இயேசுவை விடுவித்து உயர்த்தின கர்த்தராகிய தேவன் உங்களையும் அந்த விதமாக விடுவித்து காப்பார்.

அவமானத்தை சகித்த ஆண்டவர் இயேசு இப்பொழுது; "தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" என அறிகிறோம். பேதுரு தமது முதல் பிரசங்கத்தில் இதை தெரிவிக்கிறார்; "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றார்" (அப்.2:36). இயேசுவை சிலுவையில் அறைந்தவுடன் சத்தியம் தள்ளுபடியாகிவிட்டது என்ற

எண்ணம் அநேகருக்குள் இருந்தது. அவைகளை உடைத்துப்போடும்படியாக இயேசுவை பிதாவாகிய தேவன் மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். அவர் கல்லறையிலிருந்து எழுந்து நாற்பது நாளளவும் தம்முடைய சீஷர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார். இது அத்தேசம் எங்கும் மற்றும் உலக முழுவதும் பரவஆரம்பித்தது. இதையே பேதுரு தைரியத்துடன் பிரசங்கித்தார். அவனைத்தொடர்ந்து அப்போஸ்தலர்களும் சீஷர்களும் கர்த்தராகிய இயேசுவின் உபதேசத்தை ஜனங்களுக்குப் போதிக்க ஆரம்பித்தனர். சிதறிப்போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தனர். அப்பொழுது; ஸ்தேவான், "பரிசுத்தஆவியினாலே நிறைந்தவனாய், வானத்தை அண்ணாந்துபார்த்து, தேவனுடைய மகிமையையும், தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான்" என்று அப்.7:55-ல் வாசிக்கிறோம். ஆண்டவர் இயேசு பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறதை ஸ்தேவான் கண்டான் என வசனத்தில் படிக்கிறோம். அன்பானவர்களே, சகல அவமானத்தை சகித்த ஆண்டவர் இயேசுவை தேவன் உயர்த்தினார். அதைப்போல நீங்களும் நானும் நமக்கு வரக்கூடிய அவமானத்தை சகிப்போமானால் நாமும் இயேசுவினால் உயர்த்தப்படுவோம். கர்த்தர் நம்மை உயர்த்தவல்லவராயிருக்கிறார்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பானவர்களே, உங்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள நித்திய வாழ்வை பெற ஆண்டவர் இயேசுவானவர் சொல்லும் வசனத்தைக் கவனியுங்கள்; "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" என்கிறார் (வெளி.3:21). இந்த வாக்குத்தத்தைப் பற்றிக்கொண்டு இந்த உலகத்தில் உங்களுக்கு வரக்கூடிய அவமானத்தை எண்ணாமல் உங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள இந்த சிங்காசனத்தை நினைத்துக்கொண்டு இயேசுவானவர் அவமானத்தை எண்ணாமல் இந்த உலகத்தில் ஜெயித்ததைப்போல நீங்களும் ஜெயிக்க முற்படுங்கள்.

**நாம் இந்த உலகத்தில் அவமானத்தை மேற்கொள்ள எவரை நினைக்கவேண்டும்?**

ஒவ்வொருவரும் வெற்றியடைய ஒவ்வொரு மாதிரியை பின்தொடர்ந்து வெற்றியடைகிறார்கள். நமக்கு மாதிரியாக கொடுக்கப்பட்டவர் நம் ஆண்டவர் இயேசுவானவர். அவரையே நாம் மாதிரியாக கொள்ளவேண்டும். வேறு மாதிரிகளை ஏற்றுக்கொள்ளுவோமானால் நாம் வெற்றியடைய முடியாது. "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" என எபிரெய ஆசான் நமக்கு ஒரு நல்ல ஆலோசனை கொடுக்கிறார் (எபி.12:3). எவரஸ்ட் சிகரத்தில் ஏறவேண்டும் என்ற ஆசையிருக்குமானால் அதில் ஏறி வெற்றிபெற்றவர்களுடைய ஆலோசனையை கேட்பது மிகவும் அவசியம். அது நமக்கு பேருதவியாக இருக்கும். ஆண்டவர் இயேசு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தவர். இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நாம் நினைத்துக்கொண்டும், அவருடைய வசனங்களால் நாம் பொறுமையைக் கைக்கொண்டும் இவ்வுலக பாடுகளை சகிக்கும்போது நாம் வெற்றியடைய முடியும்.



பரிசுத்த வேதாகமம் என்னை
பரிசுத்த தேவனுக்கு ஏற்றவனாக உருவாக்குகிறது

- ❒ பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது
  சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும் – நீதிமொழிகள் 21:6
- ❒ நீதியையும் தயையையும் பின்பற்றுகிறவன்
  ஜீவனையும் நீதியையும் மகிமையையும் கண்டடைவான் – நீதிமொழிகள் 21:21
- ❒ அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்;
  அவன் உக்கிரத்தின் மிலாறு ஒழியும் – நீதிமொழிகள் 22:8
- ❒ உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே;
  நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு – நீதிமொழிகள் 23:17
- ❒ நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமைபாராட்டாதே;
  ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே – நீதிமொழிகள் 27:1
- ❒ வேதப்பிரமாணத்தை விட்டு விலகுகிறவர்கள் துன்மார்க்கரைப் புகழுகிறார்கள்;
  வேதப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவர்களோ
  அவர்களோடே போராடுகிறார்கள் – நீதிமொழிகள் 28:4



- ❒ உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்;
  மாறுபாடான இருவழியில் நடக்கிறவனோ
  அவற்றில் ஒன்றிலே விழுவான் – நீதிமொழிகள் 28:18
- ❒ மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும்;
  மனத்தாழ்மையுள்ளவனோ கனமடைவான் – நீதிமொழிகள் 29:23
- ❒ தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்;
  தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர் – நீதிமொழிகள் 30:5
- ❒ சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்,
  கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள் – நீதிமொழிகள் 31:30

**கொரோனா கால சிந்தனைக்கு...**

- ◆ ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது;
  பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது – பிரசங்கி 1:4
- ◆ பிறக்க ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு;
  நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு; – பிரசங்கி 3:2
- ◆ எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது,
  எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது – பிரசங்கி 3:20
- ◆ பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால்
  திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே – பிரசங்கி 5:10



- ◆ இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே;
  நீ இதைக்குறித்துக் கேட்பது ஞானமல்ல – பிரசங்கி 7:10
- ◆ ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க
  நீதிமான் பூமியிலில்லை – பிரசங்கி 7:20
- ◆ மாயை மாயை, எல்லாம் மாயை
  என்று பிரசங்கி சொல்லுகிறான் – பிரசங்கி 12:8
- ◆ காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர்
  கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே – பிரசங்கி 12:13

முத்தைக் காட்டிலும் விலையுயர்ந்தது, மேலும் நாம் நமக்காக சமய சத்தியத்தைக் கொள்ளும்படிக்கு எதையும் இழக்கவும் தேவையான எந்த மாற்றத்தையும் உருவாக்கவும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

நம்முடைய பெற்றோர்கள் நம்பி பின்பற்றின சமயம் அவர்களுடைய சுய அறிவுக்கேற்றபடியும் சந்தர்ப்பத்திற்கேற்றபடியும் காணப்பட்டது ஒருவேளை அவர்கள் சரியாக இருந்திருக்கலாம் ஆனால், அவர்கள் தவறானதைத் தெரிந்து கொண்டார்கள், நாம், தனிப்பட்ட ஆத்துமாக்களாக, நமக்கு முன்பாக கண்மூடித்தனமாகப் பின்பற்றும்படிக்கு இடங்கொடுக்க முடியாது. உண்மையான உறுதியான ஆராய்ச்சியோடு, தேவனுடைய சத்தியத்தைக் கண்டுகொள்ளும்படிக்கு தேவனுடைய உதவிக்காக ஜெபத்துடன் இணைந்து, நாம் தவறானவற்றிலிருந்து சத்தியத்தை பகுத்துணர்ந்து கொள்ள முடியும். தேவனை நோக்கி நமக்காகவும், எல்லாவற்றிற்கும் மேலாக சத்தியத்திற்கு அர்ப்பணிக்கும்படிக்கு இது நம்முடைய கடமையாயிருக்கிறது.

நீங்கள் இது தேவனுடைய சத்தியம் என உறுதிசெய்து கொள்ளுவதற்கு ஆராய்ந்து பார்க்காமலே உங்களுடைய பெற்றோரின் சமயத்தைப் பின்பற்றுவதுடன் திருப்தியடைய தீர்மானித்திருப்பீர்களானால், உங்களுடைய ஆத்துமாவின் நித்திய நன்மையை இழந்து கொண்டிருக்கிறீர்கள். திரும்பிச் சென்று மீண்டும் இந்த ஐயப்பாட்டினை மறு-ஆய்வு செய்யுங்கள். சத்தியத்தின் மூலம் ஞானம் பெற்ற சரியான நிலையை உருவாக்குங்கள்.

## நான் யார்?



- நான் அசதியாயிரேன்
- நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து...
- நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்...
- நாங்கள் பரிசுத்த பருவதத்திலிருக்கையில், வானத்திலிருந்து பிறந்த அந்தச்...
- நான் அவரை நோக்கி: இதோ, நாங்கள் எல்லாவற்றையும் விட்டு...
- நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்
- என் சகோதரன் அந்திரேயா

### ஜெபியுங்கள்

- வளர்ந்து வரும் கம்யூட்டர் யுகத்தில் ஜனங்கள் கர்த்தரை அறிந்துகொள்ள...
- ஒரு வழி அடைபட்டால் ஏழு வழிகள் திறக்கப்படுவதற்காக...
- சுவிசேஷகர்களுக்காக...
- கொரோனா நோயாளிகளுக்காக...
- சிறைக்கைதிகளுக்காக...
- தொழில் பாதிக்கப்பட்டவர்களுடைய வாழ்வாதாரத்துக்காக...
- தேவனுடைய நாமம் உலகத்தில் தொடர்ந்து மகிமைப்பட...





# நாம் ஏன் ஆராதிப்பதற்குக் கூடுகிறோம்?
## Why We Meet For Worship?

-J.C.Choate



**நா**ம் கிறிஸ்தவராயிருப்பதினாலும், கிறிஸ்துவின் சபை கூட்டத்தாராயிருப்பதினாலும் தேவனை ஆராதிக்கும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல்நாள் தோறும் கூடுகிறோம். நாம் இவ்வாறு செய்வதற்கு பல காரணங்கள் உண்டு.

இக்காரணங்களை ஆராய்வதற்கு, ஒரே தேவனும், நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவும் உண்டு என்று நாம் அறியவேண்டியது அவசியம். அவர் நமது சிருஷ்டிகரும் நாம் பெற்றிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும் அருளிச் செய்கிறவருமாயிருக்கிறார். அவருடைய அன்பினிமித்தம், அவருடைய குமாரனாகிய இயேசுவை உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்கும்படி அனுப்பி, நாம் இரட்சிக்கப்படும் பொருட்டு தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர் நமக்காக இதை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் அவருடைய பிள்ளைகளாக இருக்கின்றபடியினால், அவருக்காக ஜீவிக்கவும், அவரை சேவிக்கவும், அவர் வழிநடத்துகிறபடி அவரை ஆராதிக்கவும் விரும்புகிறோம். கிறிஸ்து, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்" (யோவா.4:24). நாம் சேவிக்கிற தேவன் ஒரு மனிதனல்ல, ஒரு மிருகமல்ல, அல்லது ஒரு உயிரற்ற பொருளல்ல. அவர் சூரியனுக்கோ, சந்திரனுக்கோ அல்லது நட்சத்திரங்களுக்கோ, ஒரு நதிக்கோ, ஒரு மலைக்கோ அல்லது ஒரு மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு விக்கிரகத்திற்கோ ஒப்பானவரல்ல. அவர் ஆவியாயிருக்கிறார், சகலத்தையும் உண்டாக்கியவர், வாழ்வில் ஆதரிக்கிறவரும், அழிவில்லாமலிருக்கச் செய்கிறவருமாயிருக்கிறார். மதிகேடன் மட்டுமே அவர் இல்லையென்று சொல்லுவான் (சங்.14:10).

நாம் பங்குகொள்ளுகிற தொழுகையில் பரலோகத்தின் தேவனுக்கு நேராக ஏறெடுக்கப்படுகின்ற ஆராதனை, துதி மற்றும் கனம் போன்றவைகள் சம்பந்தப்பட்டுள்ளன. நம்முடைய தொழுகை ஆவியினால் செய்யப்படுகிறது. அதாவது, நாம் இதை எல்லா உண்மையோடும், தாழ்மையோடும், நாம் செய்கின்ற தொழுகையில் முழு கவனம் கொண்டிருப்பவர்களாகவும் செய்கிறோம்.

நாம் உண்மையோடும் நம்முடைய தொழுகையைச் செய்கிறோம். அதன் பொருள், சத்தியத்தின்படி அல்லது தேவன் தம்முடைய வார்த்தையில் கூறியிருக்கிறபடி நாம் தேவனைத் தொழுது கொள்ளுகிறோம் என்பதாகும். நாம் தொழுதுகொள்ளுகிற தேவன் ஒருவரே, மேலும் நாம் நம்மைப் பிரியப்படுத்துவதற்குப் பதிலாக தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறோம். அதன் பொருள், நாம் மனுஷருடைய கோட்பாடுகளின்படியும் கட்டளைகளின்படியும் தேவனை தொழுதுகொள்ளுகிறவர்களாய் இல்லை என்பதாகும் (மத்.15:9). நீங்கள் அறியாமல் அவரைத் தொழுதுகொண்டால், அவர் பிரியப்படுத்தப்பட்டாலும் அல்லது

நாம் எப்படித் தொழுதுகொள்கிறோம் என்பது ஒரு பெரியகாரியமில்லையென நாம் காலமெல்லாம் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கிறோம் என நாம் காரணம் காட்டினாலும் அதனால் ஒருநன்மையுமில்லை. இது நாம் தொழுதுகொள்ளுகிற விதத்தில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது இல்லாவிட்டால் தேவன் இந்தக் காரியத்தில் அவர் பேசியிருக்கமாட்டார்.

**வேதாகமம் போதிக்கின்றபடி வாரத்தின் முதல்நாள் தோறும் கிறிஸ்தவர்களாகிய நாம் கூடி ஆராதிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம்.** இதற்கான திருஷ்டாந்தத்தை அப்போஸ்தலர்20:7-ல் நாம் பெற்றிருக்கிறோம். நாம், ‘‘வாரத்தின் முதல்நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்படவேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்’’ என வாசிக்கின்றோம். பழைய ஏற்பாடு சட்டத்தின் கீழ், ஏழாம் நாள் ஆராதனைக்குரிய நாளாயிருந்தது, ஆனால் கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து தம்முடைய சொந்தக்கட்டளையினால் அதை மாற்றிப் போட்டார் (கொலோ.2:14). அந்த பழைய கட்டளையை எடுத்துப்போட்டதின் மூலம் ஆராதனைக்குரிய நாளாயிருந்த ஏழாம் நாளும் எடுத்துப் போடப்பட்டது. கிறிஸ்து கல்லறையிலிருந்து வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்தெழுந்தார் என வாசிக்கிறோம் (28:1-6). அதைப்போல சுவிசேஷமும் வாரத்தின் முதல்நாளிலே முதல்முறையாகப் பிரசங்கிக்கப்பட்டு, அதே நாளில் சபையானது தன்னுடைய ஆரம்பத்தைப் பெற்றது (அப்.2). முடிவாக, பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, அவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் தங்களுடைய வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கும்படிக்கு அவர்களுக்கு எழுதினார். ஆனால் சில கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவரும்படி எந்த ஒரு இடத்திலும் சொல்லப்படவில்லை எனச் சொல்லலாம். பழைய ஏற்பாட்டு கட்டளையின் கீழிருந்த மக்கள் ஒவ்வொரு ஏழாம்நாளையும் அனுசரிக்கவேண்டுமென அவர்களுக்கு தேவன் சொல்லவில்லை. உண்மையென்னவென்றால், ஒவ்வொரு வாரத்திலும் வாரத்தின் முதல்நாள் உண்டு, வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய நாளாயிருக்குமானால், ஆராதனைக்குரியநாளாயிருக்குமானால் பிறகு கிறிஸ்தவர்கள் இதன் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவரவேண்டியவர் களாயிருக்கிறார்கள்.

**எபிரெய ஆசிரியர் நாம் சபைகூடிவருதலை விட்டுவிடக்கூடாதென்கிறார்.** அவர் கூறுவதைக் கேளுங்கள், அவர் கூறுகிறபடி, ‘‘அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு



ஒவ்வொருவரும் தனித்தனியான ஆத்மாவாகவும், நாம் வாழும் வாழ்க்கை முறையில் தேவனுக்கு உத்தரவாதியாகவும் இருக்கிறோம். அநேகர் வீணாக சில மத அமைப்புகளைப் பின்பற்றும்படிக்கு, அந்த நம்பிக்கைக்குள்ளாக தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கின்றபோது இது போதுமானதல்ல. இயேசு நியாயத்தீர்ப்பின் நாளிலே, “அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத்துரத்தினோம் அல்லவா? என்பார்கள் . அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்'' என்றார். அடுத்த வசனம்“…நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின் படி செய்கிறவன் எவனோ…'' என்ற கூற்றுடன் ஆரம்பிக்கிறது.

நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்,“ வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பியோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2தீமோ.3:16,17) என போதிக்கப்பட்டிருக்கிறோம்.

ஏனென்றால் வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது மேலும் இது தேவபக்திக்கடுத்த எல்லா விஷயங்களிலும் நம்மை வழிநடத்த உபதேசிக்கிறது, நாம் உந்தப்படுகிறோம், “நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு“ (2 தீமோ.2:15).

இப்பகுதிகளிலிருந்து, நாம் நம்முடைய முற்பிதாக்களின் சமயத்தை குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதற்கு இடம்கொடுக்கக்கூடாது எனக்காண்கிறோம், ஏனென்றால் அவர்கள் ஒருவேளை தங்களுடைய பெற்றோர்களின்சமயத்தைக்கூட பின்பற்றிக்கொண்டிருந்திருக்கலாம். மாறாக, நாம் நம்முடைய ஆத்தும நன்மைக் காகவேபோதுமான சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் நம்முடைய மாதிரியின் மூலம் நம்முடைய சந்ததியின் ஆத்துமாக்களும் பல்வகைப்பட்ட சமயங்களையும் புனிதநூல்களையும் நமக்காக படிப்பதற்கு முற்படுவார்கள். நாம் சத்தியத்தை தேடவேண்டும், அதைக்கண்டுபிடிக்கும்போது, குடும்பப் பாரம்பரியங் களையும் மத நம்பிக்கைகளையும் விட்டு விலக வேண்டியிருந்தாலும்கூட சத்தியத்தைப்பின்பற்றும்படிக்கு தைரியம் கொண்டிருப்போம்.

இயேசு சத்தியத்தை தேடுவது சம்பந்தமாக இந்த உவமையைக் கூறினார்:“…பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது, அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய் தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்'' (மத்.13:45,46). இந்த மனிதன் விலையுயர்ந்த முத்தை சொந்தமாக்கிக் கொள்ளும்படிக்கு தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட்டான். சத்தியம்

பெண்கள் பகுதி

# நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன்

I Will Just Follow The Religion of My parents

*-Betty*



**இ**ன்று உலகில் வேறுபட்ட மதங்களை - கிறிஸ்தவ சமயம், யூதசமயம், இந்துமதம், புத்தமதம், இஸ்லாமிய மதம், டாவோயிசம், ஜொராஸ்டரேனிசம், கத்தோலிக்க சமயம், பிராட்டஸ்டண்டு -- என காண்கின்ற வேளையில் இவற்றில் எதைப் பின்பற்றுவது என்ற எண்ணம் முழுவதும் நசுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு தெய்வங்களை, வெவ்வேறு மதசாஸ்திரங்களை, வேறுபட்ட ஆராதனை முறைமைகளை, ஒருவனுடைய வாழ்வின் பாவ பரிகாரத்திற்கு வேறுபட்ட வழிகளைக் காட்டுகிறது. எவ்வாறு ஒரு மனிதன் எந்த சமயம் தேவனிடத்திலிருந்து வந்தது, எது சத்தியத்தை மறைத்து வைப்பதற்கு சாத்தானால் உருவாக்கப்பட்ட போலியானது என்பதை அறிய முடியும்?

இந்த குழப்பமான கேள்விகளுக்குத் தப்பித்துக் கொள்ளும்படிக்கு, அதிகமான ஜனங்கள் “ நான் எனது பெற்றோரின் மதத்தையே பின்பற்றுவேன். அவர்களுக்கு எவையெல்லாம் நல்லதாகயிருந்ததோ அவைகள் எனக்கும் நல்லதாகவேயிருக்கும் “ எனத் தீர்மானிக்கின்றனர்.

ஆனால், ஒருவருடைய பெற்றோர் பின்பற்றுகின்ற ஏதோஒன்றோடு திருப்தியாயிருக்க அது பாதுகாப்பானதா? சத்தியத்தை ஒருபோதும் ஆராய்ந்து பார்க்காதபடிக்கு அவர்களுடைய பெற்றோர் மற்றும் பெற்றோருடைய பெற்றோர் பின்பற்றினவைகளையும் கூட பின்பற்றுவது தவறானதாக இருக்காதா?

ஆபிரகாமுடைய தகப்பனும் அவனுடைய தாத்தாவும் விக்கிரகாராதனை செய்தார்கள் என வேதாகமத்தில் நாம் காண்கிறோம், ஆனால் ஆபிரகாம் பரலோகத்தின் தேவனை ஆராதித்து சேவிக்கும்படிக்கு குடும்ப சமய சடங்குகளை விட்டு விலகினான் (யோசு. 24:2). இன்னொரு எடுத்துக்காட்டு, அப்போஸ்தலனாகிய பவுலும் கூட விலகினான். அவன் அப்போஸ்தலர் 23:1 ல் “சகோதாரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்குமுன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்” மேலும் மெய்யாகவே, நானும் நசரேயனாகிய ,இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன் “ (அப்.26:9) என்றான். ஆனால், அவன் தன்னுடைய பிதாக்களின் மார்க்கம் தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்டவராகிய மேசியாவாகிய கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தி வந்தது என்று கற்றுக் கொண்டபோது, அவன் யூதசமயத்தை விட்டு விலகி கிறிஸ்தவனாக மாறினான்.

நீதிமொழிகள் 14:12 “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்” என்று எச்சரிக்கிறது. நாம்



வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்” (எபி.10:23-27). நாம் ஒருவருக்கொருவர் சபை கூடிவருதலை விட்டுவிடாதிருக்க வேண்டுமென அவர் கூறுவதை தயவு செய்து கவனியுங்கள். அவர் எதைக்குறித்து பேசிக்கொண்டிருக்கிறார்? நல்லது, நாம் விட்டு விடாதபடிக்கு ஒழுங்கின் அடிப்படையில் நாம் கொண்டுள்ள சபை எது? அவர் சிலர் அதை விட்டு விலகிக்கொண்டிருந்தார்களென சொன்னார், ஆனால் அவர்கள் செய்தது போல நாம் செய்யக்கூடாது. மாறாக, நாம் ஒருவரை ஒருவர் கவனித்து, அல்லது ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி, நாளானது சமீபித்து வருகிறதைப் பார்த்து சபை கூடிவரவேண்டுமெனச் சொல்கிறார். ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்திருந்த போதிலும்கூட தொடர்ந்து மனதார நாம் பாவஞ்செய்வோமானால் நாம் தொடர்ந்து நம்முடைய பாவத்தில் நிலைத்திருக்கையில் கர்த்தர் நம்மைக் காப்பாற்றமுடியாதென்று சொல்ல அவர் துரிதப்படுகிறார். ஆனபடியினால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறது என்பது மட்டுமல்ல ஆனால் சபைக்கூடிவருவதில் இணைந்திருக்கிறதான அவருடைய சித்தத்திற்கு நாம் கீழ்ப்படிவது என்பதும் முக்கியமானதாகும்.

**இப்பொழுது தேவனுக்கு ஆராதனை ஏறெடுக்கையில் வாரத்தின் முதல் நாள்தோறும் நாம் என்னசெய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்?**

வேதவாக்கியத்தில் பல காரியங்களில் பட்டியலிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர்20:7-ல் குறிப்பிட்டுள்ளபடி, கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்கும்படிக்கு அல்லது கர்த்தருடைய பந்தியில் பங்கெடுக்கும்படிக்குக் கூடினார்கள். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல், “நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் காத்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து; இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்” (1கொரி.11:23-29). கிறிஸ்துவின் சரீரத்தை நினைவுகூரும்படி அப்பம் பிட்கப்பட வேண்டியிருந்தது, கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவுகூரும்படி பானம் பண்ணப்படவேண்டியிருந்தது என பவுல் சொன்னதை தயவுசெய்து கவனியுங்கள். வேறுவார்த்தைகளில் கூறுவோமென்றால், கர்த்தர் தம்முடைய ஜனங்கள் இரட்சிக்கப்படும்படிக்கு கிரயமாக செலுத்தப்பட்டதை தம்முடைய

ஜனங்கள் தொடர்ந்து நினைவுகூரும்படி விரும்புகிறார். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது கிறிஸ்தவர்கள் மீண்டும் சிலுவையை நோக்கிப் பார்க்கிறார்கள். இதைச் செய்யும்போது அவர்கள் கிறிஸ்து மீண்டும் வருவார் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே கர்த்தருடைய பந்திமிகவும் முக்கியமானதாகும். இது ஆவிக்குரியவகையில் கர்த்தருக்கு முன்பாக தான் எந்நிலையில் இருக்கிறோமென தன்னுடைய சொந்த வாழ்க்கையை சீர் தூக்கிப்பார்ப்பதற்கான ஒரு தருணமாயிருக்கிறது. இவ்வாறே இது கிறிஸ்துவைக் குறித்த சில மதிப்புமிக்க பாடங்களை உலகத்திற்கு உபதேசிக்கும் வாய்ப்போடேகூட கிறிஸ்தவர்களை வரவேற்கிறது.

**அடுத்ததாக, கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாள்தோறும் ஆராதிக்கும்படிக்கு கூடிவரவேண்டியவர்களாயிருக்கின்றனர்.** மேலும் அவ்வாறு அவர்கள் செய்கையில் சேமித்துவைக்க அல்லது தன்தன் வரவுக்குத் தக்கதை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அவருக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். பவுல், “பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப்பணத்தைக் குறித்து, நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்” (1கொரி.16:1,2) என்றான். 2கொரிந்தியர்9:6,7-ல் பவுல், “பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான் அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க்கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்” என எழுதினார்.

நிச்சயமாக வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று இயேசு சொன்னார் (அப்.20:35). பழைய கட்டளையின்கீழ் கர்த்தருடைய ஜனங்கள் தசமபாகம் அல்லது தங்களுடைய வருமானத்தில் 10-ல் ஒரு பகுதியினை கொடுக்க கட்டளையிடப்பட்டிருந்தனர், ஆனால் அந்த கட்டளை தொடர்ந்து நிலைநிற்கவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம், நாம் பெற்றிருக்கிற செழுமைக்கேற்ப கொடுக்கவேண்டியவர்களாயிருக்கிறோம். அது எவ்வளவு? சந்தேகமேயில்லை, அது பத்தில் ஒரு பகுதியை விட அதிகம். நிச்சயமாகவே நாம் கிறிஸ்துவுக்கு முன் வாழ்ந்துவந்தவர்களைக் காட்டிலும் அதிகமான ஆசீர்வாதங்களையும் வாக்குத்தத்தங்களையும் பெற்றிருக்கிறோம்.

**நாம் தேவனை துதிப்பாடல்களினால் பாடி கீர்த்தனம்பண்ணும்படிக்கு வாரத்தின் முதல்நாள்தோறும் கூடிவரவேண்டிவர்களாயிருக்கிறோம்.** எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல், “சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம்பண்ணி” (எபே.5:19) என்றார். கொலோசெயர்3:16,17-ல் பவுல், “கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்



மேலாக அவரைப் பின்பற்றுகிறார்கள் அவரைப் போன்று இருக்க முயற்சித்திருக்கிறார்கள். அவர் மற்ற எல்லா சக்திகள் ஒன்றிணைந்து செய்ததைப் பார்க்கிலும் அதிகமாக உலகின் போக்கை மாற்றியிருக்கிறார். மாபெரும் வல்லமை நிறைந்த சேனைகளும், சாம் ராஜ்யங்களும் விழுந்த போயிருக்கின்றன, மறக்கப்பட்டு போயிருக்கின்றன, ஆனால் அவைகளில் எந்த ஒன்றுக்குமே செல்வாக்கு இல்லை, கிறிஸ்துவின் செல்வாக்கு மட்டுமே வளர்ச்சியடைகிறது. அவருடைய ஜீவியம் மட்டுமே பாவம் நிறைந்த உலகை மாற்றக் கூடியதாக இருக்கிறது. முன்மாதிரிகள் அவைகளின் வல்லமை காரணமாக பெரிதும் முக்கியமானவைகளாயிருக்கின்றன.

**கேள்விகள்**

1. 1பேதுரு 2:21ல் இயேசுவானவர் நமக்கு ஒரு ---------- வைத்துப்போனார் என்று.
2. என்ன இரண்டு வகையான என்ன மாதிரிகள் இருக்கின்றன?
3. 1தீமோ.4:16 சொல்கிறது ----------- -------------- உபதேசத்தையும் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று.
4. ஒரு மாதிரிக்கு பணத்தைப் பார்க்கிலும் அதிகமான வல்லமை இருக்கிறதா?
5. பவுலின் பிரசங்கம் ஆவியினாலும், வல்லமையினாலும் ------- ------- இருந்தது என்று 1கொரி.2:4 சொல்கிறது.
6. எபி.11:4 சொல்கிறது ஆபேல் மரித்தும் இன்னும் ---------- என்று.
7. உலகின் மாபெரும் முன்மாதிரியாக யார் இருக்கிறார்? -------------
8. முன்மாதிரியைப் போன்றே அர்த்தம் கொள்ளும் வேறு இரண்டு வார்த்தைகள் அளிக்கவும் -------- -------.
9. எபி.4:11 ---------------- --------------- ஒரு மாதிரியைக் குறித்து பேசுகிறது
10. வனாந்திரத்திலிருந்த இஸ்ரவேலர் நமக்கு மாதிரிகளாயிருக்கிறார்களா? ----

**நடப்புச் செய்திகள்**

❒ இந்தியா சந்திக்கும் பாதிப்புகள் எனது இதயத்தை நொறுக்குகிறது என்ற **WHO** தலைவர் தெரிவித்துள்ளார்.

❒ கொரோனாவால் இறந்ததால் உறவினர்கள் வரவில்லை தாய்க்கு இறுதிச் சடங்கு செய்ய வீடியோவில் உதவி கேட்டார் மகள் - தினகரன் நாளிதழ்.

❒ சீரம் நிறுவனத்தின் **CEO** அதார் பூனவல்லாவுக்கு **"Y"** பிரிவு பாதுகாப்பு.



**தெரிந்து கொள்ளுவோம்** *- K.R.K.Ravi Asir*

**நெதர்லாந்து (ஐரோப்பா)**

**நெதர்லாந்து என்னும் சொல்லின் பொருள் தாழ்ந்த நிலம் என்பதாகும். இந்த நாட்டின் பெரும்பகுதி, கடல் மட்டத்தைவிட மிகவும் தாழ்வாக அமைந்துள்ளதாலேயே இப் பெயர் பெற்றது.**

தேவைப்படுகின்றன. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார் ஏனென்றால் உலகத்துக்கு ஒரு பூரணமான முன்மாதிரி தேவையாயிருந்தது. பலநூற்றாண்டுகளாக தேவன் மனுஷரோடே செயலாற்றுகிறவராக இருந்தார். ஆனால் கிறிஸ்து வந்த பின்னரே மனுஷர் தேவனை தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். உலமானது, அநேகம் பெரிய தலைவர்களை போதகர்களை கண்டிருக்கிறது. ஆனால் இயேசுவைத் தவிர வேறொருவருமே அவருடைய போதனைகளை நடை முறைப்படுத்தவில்லை. உலகம் எப்பொழுதும் அவருடைய பாடங்களைக் காணவும் கேட்கவும், மிகுந்த ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். இந்த தேவையானது இன்றைக்கு பெரிதாயிருக்கிறது. இயேசு தம்மை பின்பற்றியவர்களின் ஜீவியங்களில் செய்த போதனைகளைக் காண வாஞ்சிக்கிறார்கள். உலகமானது எல்லா வகையான போதனைகளுக்கும் உரிய அதிகமான போதகர்களால் திரளாய் நிறைந்திருக்கிறது. ஆனால் அவருடைய பாடங்களின் படி வாழுகிற ஒரு போதகர் என்பது ஆபூர்வமாயிருக்கிறது. பிரசங்கியாரான தீமோத்தேயுவுக்கு அவர் "தன்னைக்குறித்தும், உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும் தன்னையும் தன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளும்படியாக" என்று சொல்லப்பட்டது (1தீமோ.4:16). சபைக்குள்ளாக தான் தலைவராக வேண்டும் என்று விரும்புகிற அநேக மனுஷர் இருக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டுமே மாதிரிகளாக இருக்க விரும்புகிறார்கள். சபைக்குள்ளேயும் தேவை பெரிதாயிருக்கிறது. 1தீமோ.4:13ல் "தீமோத்தேயு விசுவாசிகளுக்கு மாதிரியாயிருக்க வேண்டும்" என்று திருத்திய பதிப்பில் இந்த வசனம் அவர் விசுவாசிகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் " என்று சொல்லுகிறது. தலைவர்கள் சபைக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும், அவர்கள் சபையினுடையவர்களாயிருந்து புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்கிற ஒரு தேவை இருக்கிறது. உலகத்திற்கு நல்ல முன் மாதிரிகள் தேவையாயிருக்கின்றன. பின்பற்றும்படியாக சபைக்கு பல நல்ல முன்மாதிரிகள் தேவையாயிருக்கிறார்கள். முன்மாதிரிகள் முக்கியமானவைகளாயிருக்கின்றன. ஏனென்றால் அவர்களுக்கான தேவை மிகவும் பெரிதாயிருக்கிறது.

**3. முன்மாதிரிகளின் வல்லமையின் காரணத்திமாக.** சரியான முன்மாதிரிகள் மிக அவசியமானதாயிருக்கின்றன. அவர்களுடைய வல்லமையின் காரணமாக பவுல் தன்னுடைய பேச்சிலும், பிரசங்கத்திலும் மனுஷ ஞானத்தின்படி இச்சக வார்த்தைகளாய் இருக்கவில்லை. அவைகள் ஆவியினாலும், வல்லமையினாலும் உறுதிப்பட்டதாயிருந்தன (1கொரி.2:4). மனுஷர் ஒரு வார்த்தையும் பேசாமலே வல்லமைவாய்ந்த பிரசங்கங்களை பிரசங்கிக்க முடியும். ஆபேல் சொன்னதாக வேதாகமம் எதையும் குறிப்பிடுகிறதில்லை. ஆனால் அவன் மரித்தும் தன் முன்மாதிரியினாலே இன்றும் பேசுகிறான் (எபி.11:4). ஏனோக்கு, ஆபிரகாம் மற்றும் யோசுவா ஆகியோர் சிறந்த பேச்சாளர்களாய் இருக்கவில்லை. ஆனால் அவர்கள் கிரியை செய்கிற மனுஷராயிருந்தார்கள். அவர்களுடைய முன்மாதிரிகளின் வல்லமையை சிந்தித்துப் பாருங்கள். கர்த்தருடைய சபையிலே இன்று மிக அதிகமான பேச்சாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள், ஆனால் செய்கிறதில்லை. இவ்வகையான தலைமை பலவீனமானதாய் இருக்கிறது. ஆனால் வல்லமை நிறைந்த தலைவர் மரியாதையை ஜெயங்கொள்ளுகிற மனுஷனாய் இருக்கிறார். அவர் தன்னுடைய நல்ல குணாதிசயத்தின் காரணமாக பின்பற்றப்படுகிறார். அவர் நன்மைக்காக பெரும் செல்வாக்கும் வல்லமையும் உடையவராக இருக்கிறார். அவருடைய ஜீவியம் சபைக்குள்ளேயும், வெளியேயும் வல்லமை வாய்ந்ததாக இருக்கிறது. இயேசுவின் ஜீவியம் எவ்வாறு உலகத்தை மாற்றியிருக்கிறது என்பதை சிந்தித்துப்பாருங்கள். பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு



ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன்பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'' என பிரகடனப்படுத்தினான். இந்த வசனங்களிலும் மற்ற பகுதிகளிலும் நீங்கள் காண்கையில், தேவனைத் துதித்து பாடுவதை முக்கியப்படுத்துகிறது. எபிரெய ஆசிரியர் நாம் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை கர்த்தருக்கு ஏறெடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம் (எபி.13:15) என்கிறார். கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் ஆராதனையில் வாத்தியக் கருவி இசையை பயன்படுத்தக்கூடாது. ஆனால் ஆராதனையில் வாத்தியக்கருவி இசையினைப் பயன்படுத்துவதால் என்ன தவறு? இது குறித்த நன்மை என்ன? வெறுமனே பாடுவது மூலம் தேவனை ஆராதிக்க முடியாதா? நம்மால் முடியுமென நீங்கள் அறிவீர்கள். ஆனபடியினால், வேதவாக்கியங்கள் தெளிவாக போதிக்கிறபடி நாம் பாடக்கடவோம். இதற்குமேல் சொல்லும்போது அது கர்த்தருடைய வெறுப்பை சம்பாதிக்க வேண்டியிருக்கும்.

**கடைசியாக, கிறிஸ்தவர்களாகிய நாம் வாரத்தின் முதல்நாள்தோறும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் நம்முடன் பேச அனுமதிக்கும்படி ஆராதிக்கிறவர்களாயிருக்கிறோம்,** மேலும் அத்தோடுகூட நாமும் நம்முடைய ஜெபத்தின் மூலம் தேவனோடு பேசுகிறவர்களாயிருக்கிறோம். நாம் 2தீமோத்தேயு2:15-ஐ வாசிக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறோம். கிறிஸ்து நாம் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக்கொண்டார் (யோவா.5:39). ஆதிக்கிறிஸ்தவர்கள் ''அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்.2:42). நாம் வேத ஆராய்ச்சியில்லாமலும், ஜெபமில்லாமலும் நாம் எவ்வாறு அநேகமாக ஆராதிக்க முடியும்?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? நீங்கள் முறைப்படி ஆராதிக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் கிறிஸ்தவரல்லவென்றால், நீங்கள் தேவனோடு ஒரு சரியான உறவில் இல்லை ஆகவே நீங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையில் அவரை ஆராதிக்க வேண்டும். நீங்கள் கிறிஸ்தவராக மாறும்படி நான் உங்களை உற்சாகப்படுத்துகிறேன். கிறிஸ்து, ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' (மாற்.16:16) என்றார். நீங்கள் அதைச் செய்தால், கிறிஸ்து உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார் (அப்.2:47). அதன்பின் நீங்கள் தொழுது கொள்ளமுடியும்.

**உங்கள் சிந்தனைக்கு...**

மனிதர்கள் ஆடும் ஆட்டம் எல்லை மீறிப்போகும்போ
இயற்கை ஆடும் ஒரு ஆட்டத்தையாரும்
தாங்க இயலாது...
தற்போது அதுதான் நடக்கிறது. நன்றி Dailyhunt



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**


**தற்சோதனை பகுதி - 33**



**33. அந்நியபாஷை அர்த்தமுள்ளதா?**

1. சபையிலே அந்நியபாஷை பேசும்போது அர்த்தஞ்சொல்லுகிறவன் தேவையில்லை ☐ வசன ஆதாரம் -----------------------------------
2. ஒவ்வொருவராய்ப்பேசவும், ஒருவன்அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும் ☐ வசன ஆதாரம் -----------------------------------
3. பாஷையின் கருத்தை நான் அறியாமலிருந்தால் பேசுகிறவனுக்கு நான் பங்காளி ☐ வசன ஆதாரம்-------------------------------------------
4. உலகத்திலே எத்தனையோவிதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது, அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல ☐ வசன ஆதாரம் -------
5. மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறது எனக்கு விருப்பமில்லை என்றார் பவுல் ☐ வசன ஆதாரம்-
6. நீங்களும் தெளிவானபேச்சை நாவினால் வசனியாவிட்டால் பேசப்பட்டது இன்னதென்று எப்படித் தெரியும்? ☐ வசன ஆதாரம் -----------------
7. பெந்தெகொஸ்தே நாளில் நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசவில்லை என்றார்கள் ☐ வசன ஆதாரம்-
8. தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசக்கேட்டார்கள் ☐ வசன ஆதாரம்---------------------------------------------------
9. அந்நிய பாஷை ஓய்ந்துபோகாது ☐ வசன ஆதாரம் ------------------
10. அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம் ☐ வசன ஆதாரம் ---------


**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள்.**
**மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் - 14**

**சபையிலே முன்மாதிரியாயிருத்தல் என்பது ஏன் முக்கியமானதாக இருக்கிறது?**

**1. ஒரு முன்மாதிரியின் அர்த்தத்தின் காரணமாக**
**2. முன்மாதிரிகளுக்கான தேவையின் காரணமாக**
**3. முன்மாதிரிகளின் வல்லமையின் காரணமாக**

**கலந்துரையாடல்**

**1. ஒரு முன்மாதிரியின் அர்த்தத்தின் காரணமாக.** ஒரு முன்மாதிரி என்பது ஒரு சித்தரிப்பாக அல்லது காண்பித்தலாக இருக்கிறது. இது சொல்வதைப்பார்க்கிலும் காண்பிக்கிறது. இது முன்வைக்கப்படுகிற ஓர் வழிமுறையாக இருக்கிறது. ஆகையால் மற்றவர்கள் தெளிவாக காணவும் பின்பற்றவும் முடியும். வேதாகமம் சொல்கிறது, கிறிஸ்துவானவர் அவருடைய அடிச்சுவடுகளை நாம் பின்பற்றும்படியாக மாதிரியை பின் வைத்துப்போனார் (1பேது.2:21). இயேசுவானவர் நமக்கு முன்பாக, நாம்பயணம் செய்ய வேண்டிய வழியை காட்டும்படியாக ஜீவபாதையிலே நடத்தியிருக்கிறார். நாம் போக வேண்டிய பாதை புரிந்து கொள்ள எளிதாயிருக்கிறது. ஏனென்றால், அவர் நமக்கு ஒரு தெளிவான வழிமுறையை அளித்திருக்கிறார். இதுதான் ஒரு உதாரணம் என்பது. "மாதிரி" என்ற வார்த்தையும் "திருஷ்டாந்தம்" என்ற வார்த்தையும் (அர்த்தம் உதாரணம்) என்பவைகள் ஒரே விதமாக இருக்கின்றன. ஒரு "மாதிரி" என்றால் என்ன என்று எல்லாருமே அறிந்து கொள்ள வேண்டும். ஒரு வியாபாரி சந்தையில் விற்பனை செய்யும்போது அவர் தன்னுடைய பொருட்களின் மாதிரியை காட்டுவார். வாங்குகிறவர்கள் தன்னுடைய பொருட்களை விரும்பத்தக்க வகையில் அவர் மிகச் சிறந்த மாதிரிகளை காட்ட விரும்புவார். வாங்குகிறவர்களை அவர்கள் வாங்கும்படி அவர் கட்டாயப்படுத்துகிறதில்லை. ஆனால் அவர் தன்னுடைய மாதிரிகளைக் கொண்டு அவர்கள் வாங்கும்படியாக கவர்கிறார். இதுவேதான் கிறிஸ்தவஜீவியத்தின் ஒரு மாதிரி என்பதும் உண்மையாக இருக்கிறது. அது நிச்சயமாக ஒரு கவரத்தக்க மாதிரியாய் இருந்து மற்றவர்களை கிறிஸ்துவுக்காக வெற்றி கொள்ள செய்ய வேண்டும். ஒரு உதாரணம் நல்லதாக அல்லது கெட்டதாக இருக்கலாம். கொடுமையான சோதோம் கொமோரா பட்டணங்கள் உதாரணங்களாயிருக்கின்றன (யூதா 7). அவைகள் கேடான உதாரணங்களாய் இருக்கின்றன.பொல்லாங்கிற்கான தேவனுடைய சரியான தண்டனை என்பதற்கு அவைகள் திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. வனாந்தரத்தில் இருந்த உண்மையற்ற இஸ்ரவேலர்கள் நமக்கு இன்றைக்கும் மாதிரிகளாயிருக்கிறார்கள் (1கொரி.10:6,11). உதாரணங்கள் பின்பு காட்சிகள், மாதிரிகள் அல்லது காண்பித்தல்களாக தேவன் நாம் செய்ய வேண்டுமென்று விரும்புகிற அல்லது நாம் செய்ய வேண்டாமென்று விரும்புகிறதற்கென்று இருக்கின்றன. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு நல்ல உதாரணமாக அல்லது கெட்ட உதாரணமாக இருக்கிறான். அவன் எப்பொழுதும் மற்றவர்களுக்கு ஒரு நல்ல அல்லது கெட்ட காண்பித்தல்களை வெளிப்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். நல்ல மாதிரிகள் சபையிலே மிக முக்கியமானவைகளாய் இருக்கின்றன; ஏனென்றால் அவைகள் எளிதாக உணரப்படுகிறவைகளும் பின்பற்றப்படுகிவைகளுமாயிருக்கின்றன.

**2. முன்மாதிரிகளுக்கான தேவையின் காரணமாக.** நல்ல முன்மாதிரிகளும் சபையிலே முக்கியமானவைகளாயிருக்கின்றன, ஏனென்றால் அவைகள் அவசியமாக